ஏற்றுக்கொண்டதற்காக நமது அரசுக்கு நான் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளும் நேரத்தில் இதை விரைவில் செயற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு விரைவில் இதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

விருதுநகர்-சிவகாசி சாலை

* 19. வினா—**திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகரிலிருந்து சிவகாசி செல்லும் வரை உள்ள சாலையை அகலப் படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவரவர்களே, தொழிற்சாலைகளும் பல்வேறு வாணிப நிறுவனங்களும் உள்ள சிவகாசி நகரிலுள்ள முக்கிய சாலை மிகவும் குறுகலாக இருப்பதால் பெருமளவில் போக்குவரத்து நெரிசல்கள் ஏற் பட்டு, அவற்றின் காரணமாக அடிக்கடி விபத்துகளும் ஏற்பட்டு விடுகின்றன. எனவே, அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையினை அகலப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றும் இப்போது இல்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைக் குறிப்பிட்டதால் இதுபற்றி தலைமைப் பொறியாளர் பரிசீலனை செய் யும்படி கேட்டுக்கொள்ளப்படுவார்.

சுற்றுலாத்துறை ஓட்டல்கள்

* 20. வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலாத் துறையின் நிர்வாகத்தில் தற்போது ஓட்டல் ஏதேனும் இயங்கி வருகின்றனவா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கே ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.